| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>அந்தோணிசாமி, த/பெ அந்தோணிசாமி | அ.வ.எண்.263/2015 | 20.01.2026 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3) நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.133/2015 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்றால் சரிதான். மேற்படி வழக்கின் சொத்துவிவரத்தில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைகள் சரியானவை என்றால் சரிதான். மேற்படி நான்கெல்லையில் குறிப்பிட்ட நபர்கள் தான் நீண்ட காலமாக சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்துவருகிறார்கள் என்றால் சரிதான். சின்னப்ப உடையாரின் மனைவி அந்தோணியாம்மாள். மேற்படி இருவருக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் 4 குழந்தைகள், அந்தோணிசாமி, மைக்கேல் உடையார், மரியசூசை மற்றும் ஜெயமேரி ஆவார்கள். மேற்படி சின்னப்ப உடையார் மற்றும் அந்தோணியம்மாளுக்கு பிறந்த அந்தோணிசாமியின் மனைவி பெயர் மரியம்மாள். மேற்படி அந்தோணிசாமிக்கும், மரியம்மாளுக்கும் எத்தனை குழந்தைகள் பிறந்தது என்றால் நான் ஒருவன் மட்டும் தான்.

4) மைக்கேல் உடையாரின் முதல் மனைவி நல்லம்மாள். மேற்படி இருவருக்கும் இரண்டு மகன்கள் அரோக்கியசாமி, அமலதாஸ் ஆவார்கள். 2 வது மனைவி பெயர் புஷ்பம், மேற்படி மைக்கேல் உடையாருக்கும், புஷ்பத்திற்கும் ரீத்தா மேரி, ஞானமணி, விஜயமேரி ஆகிய மூன்று மகள்கள் ஆவார்கள். மரியசூசையின் மனைவி பெயர் ஆரோக்கியமேரி, அவர்களுக்கு ஜூலி, மத்தியாஸ், பாத்திமா மேரி மற்றும் லாரன்ஸ் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். ஜெயமேரியின் கணவர் பெயர் சவரிமுத்து, அவர்களுக்கு ஜோசப் செல்வராஜ், மரிய செல்வி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி விவரங்களை நான் தாக்கல் செய்துள்ள பிராதில்

சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5) சின்னப்ப உடையார் இறந்த பிறகு அவருடைய சொத்து பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் மூன்று மகன்களுக்கு இடையில் பாகம் பிரிக்கப்பட்டது. சின்னப்ப உடையாருக்கு பி.வா.சா.ஆ.6 ல் கண்ட சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் உள்ளதா என்றால் காடுகள் உள்ளன. மேற்படி சின்னப்ப உடையாருக்கு சொந்தமான மொத்த காடுகளையும் மூன்று மகன்களுக்கும் தலா 1–1/2 ஏக்கர் பிரித்து கொண்டார்கள். அவ்வாறு பாகம் ஏற்பட்டது எழுத்துபூர்வமான ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சின்னப்ப உடையாரின் மூன்று மகன்களுக்கும் என்ன என்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

6) சின்னப்ப உடையாரின் சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கு எப்போது பிரிக்கப்பட்டது என்றும், எந்த எந்த சொத்துக்கள் யாருக்கு பிரிக்கப்பட்டது என்றும், எவ்வளவு சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்று எனக்கு நேரடியாகவும், கேள்வி நிலையிலும் தெரியாது என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்னர் அவரது வாரிசுகள் அனுபவித்து வந்ததாக சொல்லப்படும் சொத்துக்களை பொறுத்து அவர்களது பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டதா என்றால் இல்லை. எனது அப்பா அந்தோணிசாமிக்கு ஒதுக்கப்பட்ட 1–1/2 ஏக்கர் காட்டை 20 வருடங்களுக்கு முன்னால் விற்றுவிட்டோம். மேற்படி கிரைய ஆவணத்தில் மரியசூசை, மைக்கேல், ஜெயமேரி ஆகியோர் கையொப்பம் போட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை பார்த்தால் சின்னப்ப உடையாருக்கு யார் யார் வாரிசுகள் என்றும், அந்தோணிசாமிக்கு யார் யார் வாரிசுகள் என்றும் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் சான்றிட்ட

நகலை தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. குடியிருக்கும் வீடு சம்மந்தமாக தான் தற்போது வழக்கு நடந்து வருகிறது.

7) சின்னப்ப உடையாருக்கு எனது அப்பா அந்தோணிசாமி வாரிசு இல்லை என்றால் சரியல்ல. சின்னப்ப உடையார் சொத்தை வாங்கும் போது அதன் சர்வே எண்.382/3 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.382/3 ஐ ரீ சர்வே மூலமாக சர்வே எண்.16/3A, 16/3B, 16/3C, 16/3D என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.16/3 பி–க்கு எனது பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி ரீ செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரை ஒப்புக்கொண்டு தான் அ.வ.எண்.133/2015 என்ற வழக்கில் சர்வே எண்.16/3 பி எனக்கு உரிமையானது என ஒப்புக்கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்துவிவரத்தில் தெற்கில் பிரதிவாதியின் (ஜெயலெட்சுமி வகையறா) சொத்துக்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) சர்வே எண்.16/3 பி என 15, 16 வருடங்களுக்கு முன்பாக ரீ செட்டில்மெண்ட் செய்து பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். (தற்போது சாட்சி மாற்றி பட்டா கொடுக்கவில்லை என்று சொல்கிறார்). என்னிடம் காட்டப்படும் ரீ செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் வழக்குரையுடன் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எனது தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். (மேற்படி ஆவணம் ஒளி நகலாக இருப்பதால் எனது தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை. தற்போது வாதி தரப்பில் மேற்படி ஆவணம் குறியீடு செய்ய சொன்னதன் பேரில் பிரதிவாதி தரப்பில் ஒளி நகல் என்பதால்

தாக்கல் செய்ய இயலாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனை தொடர்பாக தீர்ப்புரையில் முடிவு செய்ய வேண்டி ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டது). மேற்படி ஆவணத்தில் காலம் 11ல் யார் உரிமையாளர்கள் என்ற விவரம் உள்ளது. மேற்படி காலம் 11ல் மைக்கேல், அந்தோணிசாமி, குண்டுமணி அம்மாள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பார்த்த பிறகும் அதில் உள்ள விவரங்கள் சரியானதா, இல்லையா என நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தில் குண்டுமணி அம்மாளுக்கு பாத்தியம் இல்லை. மேற்படி வழக்குரையில் சர்வே எண். 16/3சி என ஜெயலெட்சுமி வகையறாவுக்கு சொந்தமானது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண்.16/3சி–யும் எனக்கு பாத்தியப்பட்டது தான். மேற்படி விவரத்தையும் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.16/3பி க்கு தெற்கில் சர்வே எண்.16/3சி உள்ளது. அது குறித்து பிராது சொத்துவிவரத்தில் மேற்படி சர்வே எண்.16/3சி என்னுடையது என அத்தாக காட்டியுள்ளேனா என்றால் இல்லை.

9) அ.வ.எண்.263/2015 ல் வழக்கு சொத்து சர்வே எண்.16/3 சி–ல் ஒரு பகுதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்.16/3சி எனக்கு தான் சொந்தம் என மேற்படி அ.வ.எண்.263/2015 ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் நான் குறிப்பிட்டு கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மையானவை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.16/3சி நடேசன் மனைவி ஜெயலெட்சுமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1

ஆவணத்தை 2015 ம் ஆண்டு வாங்கிவிட்டேன். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஜெயலெட்சுமி பெயருக்கு வழங்கப்பட்டதாக நான் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கானது 30.01.2025 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**
அந்தோணிசாமி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN
Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.